திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழாசிரியர்கள் அத்தனை பேரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்றும், தமிழாசிரியர்களுக்கு ஸ்விட்ச் போடக் கூடத் தெரியாது என்றும் காங்கிரஸ்காரர்கள் கூறிவந்தார்களே, இப்போதாவது தமிழாசிரியர்கள் தகுதி மிக்கவர்கள் என்று அவர்கள் உணர்கிறார்களா? அல்லது முதலைக் கண்ணீர் வடிக்கிறார்களா?

THIRU K. VINAYAKAM : I object to this kind of question. Let him substantiate his charge. This insinuation and allegation are all baseless. The Chair should categorically discourage this kind of thing.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்பேரவை நடைமுறை விதியின்படி, கேள்வி நேரத்தில், ஊகங்கள் (inferences) குற்றங் குறைசாட்டுகள் (imputations) கூடாது. பொது விவாதத்தின்போது சால்லலாம். கேள்வி நேரத்தில் கூடாது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, நடைமுறைக் கேள்வியொன்றை எழுப்ப விரும்புகிறேன். காங்கிரஸ்காரர்களைப் பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் ஆதாரமின்றி குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார். அதைப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 'ஆதாரமில்லாத குற்றச்சாட்டு' என்று நண்பர் அவர்கள் சொன்னார்கள். முன்பு ஒரு முறை, திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள், இதே மன்றத்தில் அப்படி ஒரு குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது விதி 235-இன் கீழ் வருவது இல்லை. நேரம் தவறிப் பேசிவிட்டார். கட்சியைப்பற்றி குற்றச்சாட்டுகள் கூறவேண்டுமானால், அதை விவாத நேரத்தில் வைத்துக்கொள்ளலாம். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. பத்து மணிக்கு மேல் விவாத நேரத்தில் வேண்டுமானால் பேசலாம். அதனால், உறுப்பினர் திரு. நாகசுந்தரம் அவர்களுடைய வினாவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டியதில்லை. வினா அனுமதிக்கப்படவில்லை.

நத்தத்தில் தொழில்பேட்டை

* 36 வினா.—**திரு. பெ. வலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

மேலூர் வட்டம் நத்தத்தில் தொழில்பேட்டை அமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை, ஐயா.

1968 பிப்ரவரி 15]

திரு. பெ. மலேச்சாமி: தலைவர் அவர்களே, இந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருப்பதால், வருகின்ற ஆண்டுகளிலாவது அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனிலும் ஒரு தொழிற்பேட்டை இருக்கவேண்டும் என்ற கருத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, முதல் ஐந்தாண்டு திட்டத்திலிருந்து, இருக்கிற நிதி வசதி, மற்ற வசதிகளைப் பொறுத்து, தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 48 ரெவின்யூ டிவிஷன்களில் இப்பொழுது 30 ரெவின்யு டிவிஷன்களில் இந்தத் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கூடுமானவரை, அந்தத் தொழிற்பேட்டைகள், அந்தந்த ரெவினியூ டிவிஷனில் உள்ள முக்கியமான பெரிய நகரத்தையொட்டி அமைக்கப்படும். தொழிற்சாலைகள் பல வைப்பதற்கு யார் யார் முன்வருகிறார்கள் என்பதைப் பொறுத்தும், வாணிகத்தின் தன்மையைப் பொறுத்தும், மற்ற நிலைமைகளைப் பொறுத்தும் ஆராய்ந்து இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, நத்தத்தில் தொழிற்பேட்டை வைப்பதற்கான கூறுபாடு ஏதும் இல்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம், திரு. க. இராமமூர்த்தி எழுந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த வினா, மேலூர் வட்டம் நத்தத்தில் தொழிற்பேட்டை அமைப்பது பற்றியது. அதைப் பற்றி மட்டும் வினா கேட்க சுதந்திராக் கட்சி துணைத் தலைவர் அவர்களை அனுமதிக்கிறேன்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: தொழிற்பேட்டை, ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனுக்கும் ஒன்று அமைப்பது என்ற கொள்கை சர்க்காரில் இருப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலைக் கேட்க சந்தோஷமாக இருக்கிறது. ஆகவே, திருநெல்வேலி ஜில்லாவில், சேரன்மகாதேவி ரெவின்யூ டிவிஷனைப் பொறுத்தும் சர்க்கார் அனுதாபத்துடன் கவனித்து, அங்கே ஒரு தொழிற்பேட்டையை அனுமதிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியபடி, 48 ரெவினியூ டிவிஷன்களிலும் தொழிற்பேட்டைகள் இருக்கவேண்டும் என்ற கருத்தை அடிப்படையாகக்கொண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பொழுது கிட்டத்தட்ட 30 டிவிஷன்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 11 தொழிற்பேட்டைகள் ஆங்காங்கு வைக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்தும் தொடர்ந்து நிலைமைகள் வரும்போது கவனத்தில் கொள்ளப்படும்.